[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

இதில் ஏதேனும் சிக்கல் இருப்பதாக அவர்கள் எண்ணுவார்கள் என்று சொன்னால், அது குறித்து முறையான விண்ணப்பம் கொடுத்தால், அதைப்பற்றிப் பேசி அவைகளை முடிவு செய்து கொள்ளலாம் என்பதை அறிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிங் இன்ஸ்டிடியூட் ஆய்வக அலுவலர்களின் தகுதிப்படி மறுபடியும் நான்காவது சம்பளக் குழு பரிந்துரைத்த அடிப்படை சம்பளம், வாரியத்தின் ஆய்வக மற்றும் சார்பு அலுவலர்களுக்கு 10-6-85 முதல் சரியாக வழங்க அரசுக்கு வாரியம் பரிந்துரைக்குமா? அவ்வாறு சரி செய்த ஒப்புதல் 5 ஆவது சம்பளக் குழு முடிவுடன் இணைக்கப்படுமா என்பதோடு இந்தத் தவறு செய்த உயர் அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தவறு என்று குறிப்பிடமுடியாது. 1-10-86-ல் அவர்களுடைய கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே சில முடிவுகள் எடுக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பிரச்சினை வரும் என்று சொன்னால், அதுகுறித்து பேச்சுவார்த்தைகளின் மூலமாக தீர்த்துக்கொள்ள முடியும் என்பதை மட்டும் அறிவித்துக் கொள்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

திரு. கா. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் 7-ஆவது அறிக்கை முதல் 14-ஆவது அறிக்கை வரை பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அரசினர் தனித் தீர்மானங்கள்

(அ) மண்டல் குழு அறிக்கையின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென மத்திய அரசைக் கோருதல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் நான் மொழிகிறேன்: